# தமிழர் கட்டடக்கலை

5

**ஏ.அன்பரசி**
**(தமிழக அரசின் Dr. இராதாகிருஷ்ணன் விருதாளர்)**
**பட்டதாரி ஆசிரியர் ( தமிழ் )**
**பெருந்தலைவர் காமராசர் நினைவு அரசு மேல்நிலைப் பள்ளி ,**
**மாதநாயக்கன்பட்டி , சேலம் (மா) - 636453.**
**E-Mail Id: anbarasivijay2012@gmail.com**

**ஆய்வுச்சுருக்கம்:**

பழங்காலத் தமிழகத்தின் கட்டடக்கலை குறித்து அறிந்துகொள்ளலாம். பழந்தமிழ்நாட்டு மக்கள் தாங்கள் வாழ்ந்த நிலங்களுக்கு ஏற்பத் தங்களுக்கு கட்டிக் கொண்ட வீடுகள்/இருப்பிடங்கள் பற்றி தெரிந்துகொள்ளலாம். தமிழ்ப் பண்பாட்டிற்கேற்ப ஐந்திணைக்குரிய நிலப்பகுதியில் மக்கள் வாழும் இடங்களை விளக்குகிறது. கலாச்சாரத்தின் பரிணாம வளர்ச்சிக்கு அடையாளத்தை வழங்குவது தமிழர் கட்டிடக்கலை. கட்டடக்கலை என்பது கட்டடங்கள் மற்றும் அதன் உடல் கட்டமைப்புகளை வடிவமைத்தல், செயல்முறைத் திட்டமிடல், மற்றும் கட்டடங்கள் கட்டுவதை உள்ளடக்கியதாகும்.

வரலாற்று நாகரீகங்கள் பெரும்பாலும் அவர்களின் கட்டடக்கலை சாதனைகளின் மூலம் அடையாளம் காணப்படுகின்றன.

கட்டடக்கலை, கணிதம், அறிவியல், கலை, தொழில்நுட்பம், சமூக அறிவியல், அரசியல், வரலாறு, தத்துவம் போன்றவற்றுடன் தொடர்புள்ள ஒரு பல்துறைக்களமாகும்.

இவ்வாய்வு கட்டுரையில் தமிழர்கட்டடக்கலையில் ஒன்றான அடிப்படை கோயில் கட்டிடக்கலையைப் பற்றி காண்போம்.

**திறவுச்சொற்கள்:**

- கட்டி ☐ கட்டிடம் அமைத்து,
- கடிகைக்கோல் ☐ ஒரு நில அளவுகோல் (மூன்று பட்டி நிலமும் கடிகைக் கோலால் அளந்து)
- கடைக்காண்பார் ☐ மேற்பார்வை செய்வார்
- பித்தி - சுவர்
- கிரிவம் - கழுத்து போன்ற பகுதி
- அதிஷ்டானம் - அடிவாரம்
- ஸ்தூபி - கலசம்
- கபோதம் - கட்டிடஉறுப்பு, கொடுங்கை
- சுடுமண் - சுட்டமண், செங்கல், இட்டிகை-செங்கல்.

**முன்னுரை:**

தமிழில் "கட்டடம்" எனும் சொல் "கட்டுமான வடிவம்" என்ற பொருள் தரும். கட்டு, அடம் என்ற இரு





சொற்களும், கட்டுதற்குரிய அடுக்கு அடுக்கான வடிவம் (Building) என்பதைக் குறிக்கின்றது. “கட்டிடம்” எனும் சொல், கட்டிடத்திற்குரிய இடத்தை (site) மனையை உணர்த்தும்.

மனிதனது வாழ்வியலுடன் ஒட்டி வளர்ந்த தொன்மையான கவின் கலையாகக் ‘கட்டடக்கலை’ போற்றப்படுகின்றது. மனிதன் முல்லை நிலத்தில் வாழக்கற்றுக் கொண்டான். அதற்கேற்ப அவனது கட்டடக் கலை அறிவும் வளர்ந்து வந்துள்ளது.

மனிதனுக்கு அடிப்படைத் தேவைகள் மூன்று. அவை உணவு, உறையுள்(தங்குமிடம்), உடை, பறவைகள் கூடுகட்டி வாழ்வதையும், விலங்குகள் தாம் தங்குவதற்கு ஏற்றவகையில் குகை முதலியவற்றை நாடி வாழ்வதையும் பார்த்த மனிதன் தானும் தங்குவதற்கு உரிய இடம் குறித்து எண்ணத் தொடங்கினான். அதன் விளைவே அவன் தங்குவதற்கு உரிய இடம் உருப்பெற்றது.

ஓர் ஊரோ நகரமோ அமையவேண்டுமெனின் அதற்கேற்பப் பல வீடுகளோ கட்டடங்களோ இருத்தல் வேண்டும். வெட்ட வெளியாக இருக்கும் மைதானமோ, புதரும் காடுமாக மண்டிக் கிடக்கும் இடமோ, சமப்படுத்தப்பட்டுத் திருந்தஞ் செய்த நிலையில் பல வீடுகளோ, கட்டடங்களை கட்டப்ட்டால், ஊராகவோ நரகமாகவோ ஆகிவிடுவதை இன்றும் காணலாம்.

சிறு வீடாயினும், பெரிய மாளிகையாயினும் கோயிலாயினும் கட்டடக்கலை அடிப்படையில் கட்டும் இடத்தை வரையறை செய்து கொண்டு கட்ட வேண்டும் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றது. அதைப் பற்றி இனி காண்போம்.

**தமிழக கோயில் கட்டக்கலை**

**வழிபாட்டின் தோற்றமும் திருக்கோயில்களின் வளர்ச்சியும்**

கோயில் கட்டடக்கலை பற்றி தெரிந்துகொள்வதற்கு முன்பு கோயிலின் தோற்றமும் வளர்ச்சியும் கோயிலுக்கு முன்பாக இருந்த பெருங்கற்காலம் முதல் வரலாற்றுக்காலம் வரை வழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும் தெரிந்து கொண்ட பிறகு கோயில்களைப் பற்றி தெரிந்து கொள்வோம்.

வரலாற்றுக்கு முற்பட்ட காலமனிதன், மலைகளில் இயற்கையாக அமைந்த குகைகளில் தனது வசிப்பிடத்தை அமைத்துக் கொண்டதுடன் நாளடைவில் இக்குகைகளை வழிபடும் இடமாகவும் மாற்றிக் கொண்டான். இன்று தமிழகத்தில் பாறை ஓவியங்கள் கிடைக்கப்பெற்ற இடங்கள் பெரும்பாலும் வழிபாட்டு இடங்களாகவே கிடைக்கின்றன.

பண்டையகாலத்தில் கோயில்கள் மரம் செங்கல் இலைதழைகள் கொண்டு கட்டப்பட்டதாகவும் நீண்ட நாட்களாக நிறுத்தி ஒரு நீண்ட நாட்களாக நிலைத்திருக்கவில்லை என்று சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.

கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்ற புலவர் இடிந்து சிதைந்து போன செங்கல் கட்டிடம் கோயில் ஒன்றைக் கூறுகிறார்.

“இட்டிகை நெடுஞ்சுவர் விட்டம்
வீழ்ந்தென
மணிப்புறாத் துறந்த மரஞ்சோர்
மாடத்து
எழுதணி கடவுள் போகலிற்

புல்லென்று

ஒழுகுபலி மறந்த மெழுகாம்

புன்றிணை".

இயற்கையாக மரங்களையும், மரங்களை வைத்து கட்டிய கோயில்கள் எல்லாம் இயற்கை சீற்றத்தால் அழிந்து போவதால் இதற்கு மாற்றாக அவர்களை குடைவரைக் கோயில்களை நோக்கி பயணிக்கிறார்கள்.

குடைவரையில் இருந்து மாறுபட்டு ஒருகல் தளிகள் உருவாக்கும் முறையை பல்லவர்களும், பாண்டியர்களம், ராஷ்டிரக்கூடர்களும் அறிமுகப்படுத்தினார்கள்.

குடைவரைகளை விரும்பிய அளவில் கட்ட இயலாது. ஆனால் கட்டுமானக் கோயில்களை விரும்பிய அளவில் அமைக்கலாம். இதற்கு என்று பல வழிமுறைகளை சிற்ப நூல்கள் கூறுகின்றன.

**கோயில் வகைகள்**

கரக்கோயில், ஞாழற்கோயில், கொகுடிக்கோயில், இளங்கோயில், மணிக்கோயில், ஆலக்கோயில் என்று ஆறு வகைகள் பற்றி திருநாவுக்கரசு சுவாமிகள் தன்னுடைய திருஅடைவு திருத்தாண்டகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கோயில் கட்டுவதற்கு இடத்தை தேர்வு செய்யும் முறை:

வாழ்வதற்கும், வழிபாட்டிற்கும் என தேர்ந்தெடுக்கப்படும் இடங்கள் நீண்ட காலம் நிலைத்திருக்க வேண்டியவையாகும். எனவே நல்ல இடத்தைத் தேர்ந்தெடுப்பது மிகவும் இன்றியமையாததாகும். இடத்தின் அமைப்பு, நிலத்தின் உறுதி சூழ்நிலை இவைகளை ஆராய்ந்த பின்னரே நல்லெதொரு இடத்தைத் தேர்ந்தெடுத்தனர் அன்றைய சிற்பிகள்.

**அதன் வகைகள்**

- நிலத்தேர்வு (பூபரிட்சை)
- நில ஏற்பு (பிரவேச பலி)
- தானியச்சோதனை
- மண்சோதனை
- நீர்ச்சோதனை
- பூமியின் கடினத்தன்மை
- தவிர்க்க வேண்டிய நிலம்
- திசை அறிதல் (சங்குஸ்தாபனம்)

**சிலமுழக்கோல் அளவுகள்:**

- 24 விரல் கொண்டது கிஷ்கு
- (தஞ்சை அண்ணாமலை முழம்)
- 25 விரல் கொண்டது பிரஜாபதி
- (சிதம்பர முழம்)
- 26 விரல் கொண்டது தனுர்முஷ்டி
- 27 விரல் கொண்டது தனுர் கிரகம்

- 28 விரல் கொண்டது பிராச்சியம்
- 29 விரல் கொண்டது வைதேகம்
- 30 விரல் கொண்டது வைபுல்யம்
- 31 விரல் கொண்டது பிரகீரணம்

வீடு, மாளிகை, அரண்மனை, கோயில் இவற்றிற்கு கிஷ்கு முழம் மற்றும் பிராஜாபதியம் முழங்கள்.

**அங்குலங்கள்:**

- மானாங்குலம் (பொதுஅளவாகும்)
- மாத்ராங்குலம் (கர்த்தாவின் நடுவிரலின் அளவு)
- தேகாங்குலம்… இன்னும் நிறைய அளவு வகைகள் உள்ளன.

**திருக்கோயிலும் நிர்மாணமும்**

திருக்கோயில் என்பது கெற்பகிரகம் என்கின்ற கருவறை, அந்திரானம், அர்த்தமண்டபம், விமானம், மகாமண்டபம் உள்ளிட்ட மண்டபங்கள், பரிவார சந்நிதிகள், பிரகாரங்கள், திருசுற்றுமதில்கள், கோபுரம் உள்ளிட்டவை அடங்கியதாகும்.

**திருக்கோயில்களின் வேறுபெயர்கள்**

ஆலயம், பிரசாதம், நிகேதனம், அஸ்பதம், ஆதாரம் என பல உண்டு.

இறைவனின் கிடந்தகோலம் முழு ஆலயமாக கருதப்படுகிறது.

இறைவனின் அமர்ந்தகோலம் விமானமாக கருதப்படுகிறது.

**கோயில் கட்டடக்கலையின் உறுப்புகள்**

**உபபீடம்**

திருக்கோயில்களில் அதிட்டானம் என்று அழைக்கப்படும் உறுப்பிற்கு கீழ் அமைக்கப்படும் மேடைக்கு உபபீடம் என்று பெயர். இது 10 வகைப்படும்.

**அதிட்டானம்**

கட்டிட கலையில் மிகவும் முக்கியமான பங்கு வகிப்பது அதிட்டானம்.

**பாதவர்க்கம்(பித்தி)**

பாதவர்க்கம் என்பது சுவரைக் குறிக்கும்.

**பித்தியில் காணப்படும் தோரணம்**

பித்தியில் (பாதவர்க்கம்) காணப்படும் தோரணம் மூன்று வகைப்படும்.

- சித்ததோரணம்
- மகரத்தோரணம்
- பத்ரதோரணம்

**ஜாலக வகைகள்(ஜன்னல்)**

கோநேத்திரம், ஹஷ்தி நேத்திரம், நந்தியாவர்தம், அப்ஜவர்த்தம், புஷ்பகரணம், சமகர்ணம்.

**பிரஸ்தரம்**

கருவறைக் கட்டத்தில் சுவர்ப்பகுதிக்கு மேல்மூடுவதற்காகக் கூரையாகப்பயன்படும் உறுப்பு பிரஸ்தரமாகும்.

பிரஸ்தரம் - மறைத்தல், மூடுதல், பாவுதல்.

**கட்டக்கலையில் விமானங்கள்:**

கட்டடக்கலையில் விமானங்கள் நாகரம், திராவியம், வேசரம், ஆய்த வேசரம், அஷ்டாங்க விமானம், கஜபிருஷ்ட விமானம்,

**மண்டபங்கள் மற்றும் தூண்கள்**

கட்டடக்கலையில் மண்டபங்கள் முக்கிய இடம் பெறுகின்றன. 22 வகையான மண்டபங்கள் உள்ளன.

தற்கால சிற்பிகளின் வழக்கில் உள்ள தூண்களின் பெயர்கள் 16 உள்ளன.

**கோபுர தளம்**

வாயிலில் உள்ள கோபுரங்களை அவற்றின் தளங்களை வைத்து ஐந்தாகப் பிரித்துள்ளன சிற்ப நூல்கள்

- ஒருதளம் - துவார சோபை
- இருதளம் - துவார சாலை
- மூன்றுதளம் - துவார ஹர்ம்யம்
- நான்குதளம் - துவார ப்ராஸதம்
- ஐந்து (அ) அதற்குமேல் - துவார கோபுரம்.

கிரீவம், சிகரம், ஸ்தூபி

கிரீவம் என்பது கழுத்து போன்ற பகுதி. உள்ளடங்கி இருக்கும்.

சிகரம் என்பது விமானத்தின் மேல் பகுதியில் இருக்கும்.

ஸ்தூபி என்பது கலசம் என்று அழைக்கப்படுகிறது. விமானத்தின் உச்சியில் இருக்கும்.

**முடிவுரை:**

'ஆ' எனும் பசு (உயிர்) 'லயம்' (செம்மை) கொள்வதற்குரிய இடம் எனப் பொருள் கொள்ளலாம். எனவே இறைவன் உறைகின்ற ஆலயத்தில் நம்பிக்கையுடன் இறைமையில் உயிர் ஒன்றுதற்குரிய இடம் கோயில் என்று பொருள் கொள்ளலாம். அவ்விறைவன் இருக்கும் கோயில் மற்றும் கோயில் கட்டடக்கலையைப் பற்றி இவ்வாய்வுக் கட்டுரையில் கண்டோம்.

**துணைநூற்பட்டியல்**


- தமிழ்நாட்டுக் கோயிற் கட்டடக்கலை
- சிற்ப செந்நூல்
- திரு.சங்கரநாராயணன் முகநூல் பதிவு
- ஆலய நிர்மாண பிம்பலஷன சிற்பநூல்
- கூகுல் ஆண்டவர் .